## தூய்மை பாரதம்



வேளாண் அறிவியல் மையத்தில் 2021ம் ஆண்டு அக்டோபர் மாதம் 02ம் தேதி முதல் 31ம் தேதி வரை " தூய்மை இந்தியா " திட்டத்தின் கீழ் பல்வேறு கிராமங்களில் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதன் ஒரு பகுதியாக, வேளாண் அறிவியல் மையம் வளாகம், கோயில், ஆரம்ப சுகாதார நிலையம் ஆகிய பொது இடங்களில் பண்ணைக் கழிவு மேலாண்மை பற்றிய விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டது. இந்த திட்டத்தில் சுமார் 1234 விவசாய பெருமக்கள், அலுவலகர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

## நிலைய மற்றும் களப்பயிற்சி நிகழ்வுகள்

வேளாண் அறிவியல் மையம் சார்பாக 2021ம் ஆண்டு ஏப்ரல் முதல் நவம்பர் மாதம் வரை 33 நிலையப்பயிற்சிகள் நடத்தப்பட்டது. இதில் 885 விவசாய பெருமக்கள் பயன்பெற்றனர். மேலும் களப்பயிற்சிகள் திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் பல்வேறு கிராமங்களில் நடத்தப்பட்டது. இதில் 663 விவசாய பெருமக்கள் பங்குகொண்டு பயன் பெற்றனர். இப்பயிற்சியில் விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த துறைகளில் பல்வேறு தலைப்புகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டது.

## பண்ணை ஆராய்ச்சித்திடல் 2021 -2022

| வ.எண் | தலைப்பு |
|---|---|
| 1 | நெற்பயிரில் காட்டுப்பன்றி மேலாண்மை முறைகள் |
| 2 | உயர் விளைச்சல் தரும் பச்சைப்பயிறு இரகங்களை ஆய்வு செய்தல் |
| 3 | தென்காசி மாவட்டத்திற்கு உகந்த வீரிய ஒட்டு இரக மிளகாய் பண்ணை ஆராய்ச்சி திடல் |
| 4 | சிறுதானிய குக்கீஸ்களில் பல்வேறு வகையான மூலிகைப் பொடிகளை மதிப்பீடு செய்தல் |

## முதல் நிலை செயல்விளக்கம் 2021 - 2022

| வ.எண் | தலைப்பு |
|---|---|
| 1 | உயர் விளைச்சல் தரும் ADT – 53 நெல் இரகங்கள் பற்றிய செயல்விளக்கம் |
| 2 | சின்ன வெங்காயத்தில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை பற்றிய செயல்விளக்கம் |
| 3 | அர்கா அபேத் வீரிய ஒட்டு இரக தக்காளி செயல்விளக்கத் திடல் |
| 4 | வேளாண் செயலி – IVRI-நோய் தடுப்பு செயலி பற்றிய செயல்விளக்கம் |
| 5 | வாழைப்பழ அத்தி தயாரிப்பதற்கான உலர்வித்தல் மற்றும் பக்குவபடுத்தல் தொழில்நுட்பம் பற்றிய செயல்விளக்கம் |
| 6 | Co(FS) 31 தீவனச் சோளம் பற்றிய செயல்விளக்கம் |
| 7 | புறக்கடை கோழி வளர்ப்பு (அசில், க்ராஸ்) பற்றிய மாதிரித்திடல் பற்றிய செயல்விளக்கம் |

| வேளாண் அறிவியல் மையம் தென்காசியில் விற்கப்படும் தொழில்நுட்ப உற்பத்தி பொருட்கள் | வேளாண் அறிவியல் மையம் தென்காசியில் விற்கப்படும் மதிப்பூட்டப்பட்ட உணவு பொருட்கள் | | |
|---|---|---|---|
| ஒட்டு ரக கன்றுகள் (மா) | சிறுதானிய குக்கீஸ் | கடலை எண்ணெய் | சிக்கன் மசாலா பொடி |
| தென்னை நாற்றுகள் | நெல்லி சர்பத் | கறிவேப்பிலை சூப் மிக்ஸ் | மட்டன் மசாலா பொடி |
| மண்புழு உரம் | ஆவாரம்பூ சர்பத் | தேங்காய் எண்ணெய் | வத்தக்குழம்பு பொடி |
| அசோலா | மூலிகை எண்ணெய் | மீன் குழம்பு பொடி | மூலிகை ரசப் பொடி |
| | நெல்லி ஊறுகாய் | பிரியாணி பொடி | சாம்பார் பொடி |


கருத்து மற்றும் வழிகாட்டுதல் : முனை. **ஜெ. சுகுமார்,** முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் (பொறுப்பு)

இணை ஆசிரியர்கள் : செல்வி. **இரா. மோனிகா,** தொழில்நுட்ப வல்லுநர் (வேளாண் விரிவாக்கம்)

திருமதி. **க. திருமலைச்செல்வி,** தொழில்நுட்ப வல்லுநர் (மனையியல்), திரு. **மு. இளவரசன்,** தொழில்நுட்ப வல்லுநர் (தோட்டக்கலை)

திரு. **மோ. பாலசுப்பிரமணியம்,** தொழில்நுட்ப வல்லுநர் (பயிர் பாதுகாப்பு),திரு. **சி. சேதுபதி,** திட்ட உதவியாளர் (மண்ணியல்),

Dr. **ச. லியோனல் ராபின்ஸ்,** தொழில்நுட்ப வல்லுநர் (கால்நடை அறிவியல்), திருமதி. **செ. சுவலட்சுமி,** (சுருக்கு எழுத்தாளர்)

திரு. **அ. மணிமுத்துராஜா,** திட்ட உதவியாளர் (கணினி),செல்வி. **ரா. பிரதனா,** திட்ட உதவியாளர் (பண்ணை மேலாளர்)



**வெளியிடுபவர் : இயக்குநர், வேளாண் அறிவியல் மையம், ஊர்மேலழகியான் கிராமம்**

**ஆய்க்குடி அஞ்சல் , கடையநல்லூர் வட்டாரம், தென்காசி மாவட்டம் - 627 852**

அலைபேசி எண் : +91 4633 292500 மின்னஞ்சல் : tirunelvelikvk@gmail.com இணையதளம் : www.rvskvk.org




# ICAR – வேளாண் அறிவியல் மையம்
## திருநெல்வேலி (தென்காசி) மாவட்டம்
## செய்தி மடல்

செய்தி: 1 மடல்-1 ஏப்ரல்-நவம்பர் (2021)

## காய்கறி மற்றும் பழங்களில் அறுவடைக்கு பிந்தைய பதப்படுத்துதல் மற்றும் பொதியல் தொழில்நுட்பம் & தேனீ வளர்ப்பிற்கான திறன் மேம்பாட்டு பயிற்சி

வேளாண் அறிவியல் மையம் வளாகத்தில் 2021ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 23 முதல் 30ம் தேதி வரை ஆத்மா உடன் இணைந்து " காய்கறி மற்றும் பழங்களில் அறுவடைக்கு பிந்தைய பதப்படுத்துதல் மற்றும் பொதியல் தொழில்நுட்பம் & தேனீ வளர்ப்பு " குறித்த கிராமப்புற இளைஞர்களுக்கான உறைவிட ஏழு நாள் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பழங்கள் மற்றும் காய்கறிகளை சந்தைப்படுத்தும் உக்திகள் மற்றும் சாகுபடி பற்றி எடுத்துரைக்கப்பட்டது. மற்றொரு பயிற்சியில் விவசாயத்தில் தேனீ வளர்ப்பின் பங்கு மற்றும் முக்கியத்துவம், தேனீ இனங்கள், பராமரிப்பு தொழில்நுட்பங்கள், இடத்தேர்வு, தேனீயைத் தாக்கும் பூச்சி மற்றும் நோய்கள், கட்டுப்படுத்தும் முறைகள், தேன் எடுக்கும் முறைகள் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. இறுதியாக 30 பங்கேற்பாளருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.



## விவசாயிகளுக்கான உணவு மற்றும் ஊட்டச்சத்து விழிப்புணர்வு நிகழ்ச்சி



வேளாண் அறிவியல் மையத்தில் வைத்து விவசாயிகளுக்கான உணவு மற்றும் ஊட்டச்சத்து குறித்து ஆகஸ்டு மாதம் 26ம் தேதி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சரிவிகித உணவு, தினமும் பரிந்துரைக்கப்பட்ட உணவு வகைகள், ஆரோக்கியமான உணவுகளை தேர்ந்தெடுக்கும் முறைகள், பருவகால காய்கறி மற்றும் பழங்களில் உள்ள சத்துக்கள், காய்கறி தோட்டம் அமைப்பதன் மூலம் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதிசெய்தல், உயிர் வலுவூட்டப்பட்ட காய்கறி மற்றும் பழங்களை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஊட்டச்சத்து காய்கறி தோட்டம் மற்றும் சரிவிகித உணவு குறித்த புத்தகம் 128 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

## மரம் நடுதல் பற்றிய விழிப்புணர்வு முகாம்

வேளாண் அறிவியல் மையத்தில் வைத்து விவசாயகளுக்கான உணவு மற்றும் ஊட்டச்சத்து குறித்து நவம்பர் மாதம் 17ம் தேதி மரம் நடுதல் பற்றிய விழிப்புணர்வு நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறுதானியங்களில் உள்ள சத்துக்கள், சிறுதானியத்தில் செய்யப்படும் உணவு வகைகள் மற்றும் ஊட்டச்சத்து காய்கறி தோட்டம் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் உணவு கண்காட்சி, மரம் நடுதல், சிறுதானிய உணவு வகைகள் தொடர்பான போட்டிகள் நடைபெற்றது. இதில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டது. IFFCO மூலமாக 100 பயனாளிகளுக்கு காய்கறி தோட்ட விதைகள் வழங்கப்பட்டது. இதில் 177 விவசாயிகள் பங்குபெற்றனர்.



## விவசாய கருத்தரங்கம்



வேளாண் அறிவியல் மையத்தில் மதராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட் நிறுவனத்துடன், அரசு வேளாண்மை துறை இணைந்து நடந்திய கருத்தரங்கத்தில் மதுரை மண்டல மேலாளர் திரு. சிவகுமார், மற்றும் தென்காசி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் திரு. நல்லமுத்துராஜா மற்றும் மாவட்ட ஆட்சியாளர் நேர்முக உதவியாளர் திரு. பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டு நீர், நிலம் மற்றும் உரம் மேலாண்மை குறித்து சிறப்புரை ஆற்றினர். தோட்டக்கலை பயிர்கள், பயிர்களில் பூச்சி மற்றும் உர மேலாண்மை, சிறுதானியங்களில் மதிப்பூட்டுதல் போன்றவை எடுத்துரைக்கப்பட்டது. இதில் 104 விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

## உலக மண் தினம்



வேளாண் அறிவியல் மையம் வளாகத்தில் " உலக மண் தினவிழா - 2021 " நடைபெற்றது. இதில் பயிர்பாதுகாப்பு தொழில்நுட்ப வல்லுநர் திரு. மோ. பாலசுப்பிரமணியம் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். '' மண் வளத்தை மேம்படுத்தும் வேளாண் நடைமுறைகள்" குறித்து முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் (பொ) திரு. ஜெ. சுகுமார் அவர்கள் விரிவுரை ஆற்றினார். சங்கரன்கோயில் எலுமிச்சை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் டாக்டர். ராஜமாணிக்கம், அவர்கள் மண்ணின் தன்மை மற்றும் அதன் மேலாண்மை குறித்து எடுத்துரைத்தார். திட்ட உதவியாளர் திரு. சேதுபதி அவர்கள் " மண் மாதிரி சேகரிப்பு மற்றும் மண் ஊட்டச்சத்து மேலாண்மை குறித்து விளக்கினார். திரு. சக்திவேல் அவர்கள், IFFCO, NANO யூரியா பற்றி எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் கண்காட்சி, மண் ஊட்டச்சத்து அட்டை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இறுதியாக திரு.மு. இளவரசன், தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர் அவர்கள் நன்றிரை வழங்கினார். இதில் 73 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## லாபகரமான பால் பண்ணை பற்றிய திறன் மேம்பாட்டு பயிற்சி



வேளாண் அறிவியல் மையத்தில் லாபகரமான பால் பண்ணை மற்றும் சுத்தமான பால் உற்பத்தி தொழில்நுட்பங்கள் மற்றும் பாலில் மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் என்ற தலைப்பில் 2021ம் ஆண்டு 25ம் தேதி முதல் 27ம் தேதி வரை விவசாயிகளுக்கு மூன்று நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் விலங்குகளைத் தேர்வு செய்தல், கால்நடை கொட்டகை அமைத்தல், பண்ணை விலங்குகளை நிர்வகித்தல், பண்ணையின் தீவனம், நோய் மேலாண்மை குறித்த தொழில்நுட்பம் மற்றும் பாலில் மதிப்பூட்டப்பட்ட பொருட்களான மசாலா பன்னீர், பால்கோவா, ரோஸ்மில்க், ரசமலாய், ரசகுல்லா, கேரட் கியர் மற்றும் பீட்ரூட் கியர் செய்து காண்பிக்கப்பட்டது. நமது நிலையத்தில் உள்ள கலப்பு தீவன மாதிரித்திடல் மற்றும் சாம்பவர்வடகரையில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த மாதிரி அலகுக்கு கண்டுணர்வு சுற்றுலா அழைத்து செல்லப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும் விவசாயிகளுக்கு லாக்டோமீட்டர் அளவீடு செய்யும் முறை, அசோலா, ஹைட்ரோஃபோனிக்ஸ், சிலேஜ் மற்றம் வைக்கோல் பற்றி செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

## ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு வாரம்



வேளாண் அறிவியல் மைய வளாகத்தில் திருநெல்வேலியில் அக்டோபர் 26 முதல் 31 வரை ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு வாரம் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. விழிப்புணர்வு நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக பல்வேறு செயல்பாடு, ஒருங்கிணைந்த உறுதிமொழி எடுக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சுமார் 118 பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



ஏப்ரல் - நவம்பர் 2021

## பண்ணை மகளிர் விழா



வேளாண் அறிவியல் மைய வளாகத்தில் 2021ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ம் தேதி அன்று பண்ணை மகளிர் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் " பெண்கள் மேம்பாடு மற்றும் முன்னேற்றம்" என்ற தலைப்பில் பேச்சுப் போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது. சிறந்த பெண் தொழில்முனைவோர், முன்னோடி விவசாய பெண்மணிகள், பொது சேவகர்கள் மற்றும் மாதிரி வீட்டு காய்கறித் தோட்டம் அமைத்த பெண்கள் ஆகியோர் கவுரவிக்கப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டது. விருது பெற்ற அனைவரும் தாங்கள் கடந்து வந்த பாதையின் அனுபவம் குறித்து எடுத்துரைத்தனர். இப்பயிற்சியில் மதிப்பூட்டப்பட்ட பொருட்களின் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுயிருந்தது. பங்கு கொண்ட அனைத்து விவசாய பெண்கள் வீட்டு காய்கறி தோட்ட விதைககள் வழங்கப்பட்டது.

## தென்னை மரம் ஏறும் பயிற்சி



தென்னை வளர்ச்சி வாரியம் மற்றும் வேளாண் அறிவியல் மையம் சார்பில் இயந்திரம் மூலம் விவசாயிகளுக்கு தென்னை மரம் ஏறும் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் இயந்திரம் மூலம் தென்னை மரம் ஏறுவது குறித்தும், தென்னை மரம் ஏற பயன்படுத்தப்படும் இயந்திரத்தின் தொழில்நுட்பங்கள் குறித்தும் விளக்கப்பட்டது. தென்னை மர சாகுபடிக்கான தென்னை மரத்தின் ரகத் தேர்வு, பராமரிப்பு, உர மேலாண்மை, பூச்சி மேலாண்மை, நீர் மேலாண்மை, தொழில்நுட்பங்கள், மனித வள மேம்பாட்டிற்கான தலைமைப் பண்பு, கால மேலாண்மைக் குழு கலந்தாய்வு உள்ளிட்டவை குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டன. இந்த பயிற்சியில் 20 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியின் போது பயனாளிகளுக்கு இலவச உணவு மற்றும் ரூ. 4 ஆயிரம் மதிப்பிலான தென்னை மரம் ஏறும் இயந்திரம், காப்பீடு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## ஆடு வளர்ப்பு மற்றும் பனை ஓலையில் வீட்டு உபயோக பொருட்கள் தயாரிக்கும் தொழில்நுட்ப பயிற்சி




வேளாண் அறிவியல் மையத்தில் கடையம் மற்றும் ராதாபுரம் பகுதியைச் சேர்ந்த பெண் விவசாயிகள் நலனுக்காக " ஆடு வளர்ப்பு மற்றும் பனை ஓலையில் வீட்டு உபயோக பொருட்கள் தயாரிப்பு" குறித்த மூன்று நாள் தொழில் நுட்ப பயிற்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஆடு வளர்ப்பிற்கான இடம் தேர்வு, கொட்டகை கட்டுதல், தேர்வு, கட்டுப்பாடு மற்றும் தீவனம் ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். மற்றொரு பயிற்சியாக பனை ஓலையில் கைப்பை, அஞ்சறைப் பெட்டி, பல்வேறு பட்ட அளவுகளில் பொதியல் பெட்டிகள் செய்வதற்கு கற்பிக்கப்பட்டது. இதில் 40 விவசாயிகள் மற்றும் விவசாயப் பெண்கள் கலந்து கொண்டனர்.

## விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகள் கலந்தாய்வு கூட்டம்



வேளாண் அறிவியல் மையத்தில் விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகள் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பருவநிலை மாற்றத்திற்கு ஏற்ற வேளாண் தொழில்நுட்பங்கள் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பருவநிலை மாற்றத்திற்கு ஏற்ற இரகங்கள், பலதரப்பட்ட பயிர் சாகுபடி, ஊடுபயிர் சாகுபடி, மண்வள மேலாண்மை, நிலத்தில் மண் ஈரப்பதத்தை தக்கவைக்கும் தொழில்நுட்பங்கள், மண் மற்றும் நீர் அறுவடை அமைப்புகள் & கால்நடை பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பிரதமர் அவர்களின் காணொளி நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 107 விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.